ꦯꦿꦶꦠꦥꦥꦶꦮꦤ꧀ꦏꦫꦤ꧀

63, 12 x
Nor
222803

உ

கணபதிதுணை.

# ருமெய்யத்திரிபந்தாதி.

இஃது

புதுக்கோட்டை சமஸ்தானம்

இராயபுரத்திலிருக்கும் குன்றக்குடித்

திருவண்ணாமலையாதீன மடத்து வித்வான்

புகழேந்தி குலதிலகராகிய

வாணிதாச—வீரபத்திரக் கவிராயரவர்கள் [illegible]ரும்

முத்துசாமிக்கவிராயரவர்கள் குமாரருமாகிய

வீரபத்திரக்கவிராய ரியற்றியது.

ஷை இராயபுரத்திலிருக்கும்

நா. கதி. கதிரேசன் செட்டியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

193[illegible]

234

031,12x
N08

222803

# சாத்துகவி.

சிறுகூடற்பட்டி யென்னும் செந்நெற்
சாமிக்குட்டி ஐயர் என்று பெயர் வழங்(
ப்ரம்மஸ்ரீ செ. சுப்பராய ஐயர [illegible]ர்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்படைத்த தடம்பணை சூழ்திருமெய்ய மாநாகரி
ணில[illegible]கொன்றைத்
தார்படைத்தவரைப்புயத்துச் சங்கரன்மேலந்தாதித்
தமிழொன்ருக்கிச்
சீர்படைத்த செந்தமிழ் நாட்டினைத்து முள்ளங்களிகூரச்
சிறப்பிற்றந்தான்
பேர்படைத்தகவிஞர் புகழ்வீர பத்திரப்பெயராற்
பிறங்குவோனே.

வெண்பா.

சத்தியகிரீசர்மேற்சாற்றுந்திரிபந்தா
தித்தமிழைச்செட்டுச்சீர்த்தியுற்ரு—னித்த
மதிகபுகழ்சேர்நாச்சியப்பவணிகன்சேய்
கதிரேசமாணிக்கனே.

222803

உ

கணபதிதுணை.

# திருமெய்யத்திரிபந்தாதி.

## காப்பு.

ருக்கோட்டு வாய்மலர்த் தேனுகுங் காமெய்த் தலத்தலமன்
ருக்கோட்டு வானரு ளெந்தையர் தாதி பகரவன்னை
நக்கோட்டு வூரத் தியான்புகு தாநெறி காட்டுமொற்றைத்
ருக்கோட்டு வான்புரி சைக்களிற் றின்ருள் செயுந்துணையே.

## நூல்.

திருமா லையன்பணி வானவ னீள்சத் தியகிரிசேர்
தருமா லையன்பணி வார்சடி லன்பவ சாகரமாங்
கருமா லையன்பணி வார்க்குத வாதருள் கத்தன்கொன்றை
மருமா லையன்பணி வான்பத நண்ண வழித்துணையே. (க)

துணையாவ ரிக்குச் சிலையினைச் செற்றுச் சுடருநுதற்
கணையாவ ரிக்கு மயற்குமெட் டாதகர் கீதரசங்
கணையாவ ரிக்கு விளைக்கண் டுயின்மெய் யசலநின்றுட்
புணையாவ ரிக்கும் பவக்கடனீ யன்றிப் போக்குதற்கே. (உ)

தற்பர வாரண னீள்சிரங் கொய்தவ தாணுவிடப்
பொற்பர வாரம் புனையும் புயாசல புங்கவமெய்
வெற்பர வாரணக் கேதனன் றந்தை வினையினின்று
நிற்பர வாரன்பி லேற்குன் கருணையெந் நாள்வைப்பதே. (ங)

நாள்ர விந்த முகைநிகர் கொங்கைநல் லார்மயலார்
கோளர விந்த மனத்திலங் காமணக் கொன்றையந்தார்
வாளர விந்த முடியார்மெய் வெற்பர் மறைபரவுந்
தாளர விந்தம் பணித்தோன் பணிபவர்ச் சார்ந்துய்நெஞ்சே. (௪)

சாரச மாரம் பதந்தந்த மின்னிடைத் தாழ்குழலீர்
நீரச மாரணஞ் செய்தென்மெய் வெற்பினிந் நேரிழைக்காக்
கோரச மாரமு தும்பாலுங் கைப்பக் குமட்டுறுவாண்
மாரச மாரன் றிருப்புய மாலையின் மாலைவைத்தே. (௫)

மாலையம் பாகந் துளக்கவெய் வேட்கு வருந்திமின்னாள்
வேலையம் பாக விழிநீர் பெருக்கினண் மேவுதியின்
பாலையம் பாகதை நேர்மொழி பங்கமெய் வெற்பமறை
நாலையம் பாகன் விதியெனக் கொண்டரு ளாயகனே. (௬)

அகந்தா னமர்நெஞ்ச மேழுப் புரஞ்செற்ற வண்ணலுயர்
மகந்தான மல்குமெய் யப்பதி யானுமை வாம்முற
வுகந்தா னமலனென் றோவாந லன்பி னுரைக்கவதே
சுகந்தான மந்தா வளமன்னர் வாழ்வுஞ் சுகமல்லவே. (௭)

சுகந்தந் தனவர தம்மயற் காக்கிய தோகையரம்
பகந்தந்த நஞ்ச முநந்திணைப் பாதஞ்செம் பங்கயமென்
பிகந்தந்த னஞ்சொல் விடைநடை யென்னப் பிதற்றுநெஞ்சே
திகந்தந் தனதடி தாழ்மெய்க் கிரீசனைச் சேரவென்றே. (௮)

ஏதந் தவாதனந் தர்ப்பனைச் செற்றி வெரிநுதலப்
பாதந்த வாரணத் தோலீர்த் தணியணி பத்தர்கணித்
தாதந்த வார்கலி நஞ்சுண்மெய் வெற்ப சலந்தரனைக்
காதந் தவாழி யரிவேண்டத் தந்தவ காத்தருளே. (௯)

கார்ச்சந் திரதில கந்திகழ் மெய்வரைக் கட்பரவைக்
கச்சந் திரவி னடந்தார்க் கிவண்மை யலைக்குழற்கொண்
மூச்சந் திரமுகத் தீர்சொல்வ ரார்நம் முகமனுமேற்
பூச்சந் திறங்குநெல் லாயின ளாலிந்தப் பொற்கொடியே. (௧௦)

பொற்கொடி யானம் புரிந்து கயவரைப் போற்றுமிப்பூ
விற்கொடி யானம் பணிசெய் கிலனென் றெனையொறுக்கேன்
மற்கொடி யானரு ளாழிமெய் வெற்ப மணிநிறத்தி
கற்கொடி யானத் தவன்புறங் காட்டத் தாள்காட்டுவையே. (௧௧)

கோட்டம் பரிக்குந் திருமுடி யார்சடைக் கற்றையின்வா
னீட்டம் பரிக்குமுத் தீன்வயன் மெய்வரை நித்தர்மறை
யோட்டம் பரிக்குயர் சேவகர் பொற்சிலை யொண்சிலையிற்
பூட்டம் பரிக்குத் வாழிய ரென்னைப் புரப்பவரே. (௧௨)

புரக்குஞ் சரமணிந் தானைமெய் யன்பர்கள் போற்றவருள்
சுரக்குஞ் சரதவெற் பாரம ரேசனைத் தொல்லதளைக்
கரக்குஞ் சரமுரித் துத்தரித் தானையென் கள்ளமனக்
குரக்குஞ் சரண்புகு மோசலிக் குந்தளிக் கொள்கைவிட்டே. (௧௩)

கையர வப்பணி செய்துழ லாதுன் கருணையென்மேல்
வையர வப்பணி யாய்மலை மாதிடம் வைத்தநண்பா
செய்யர வப்பணி லந்திகழ் மெய்ப்ப தியாய்குகன்று
தையர வப்பணி செஞ்சடை யாய்நின் சரண்சரணே. (௧௪)

சரவணத் தான குகன்றாதை மெய்ச்சயி லன்றிரைச்சா
கரவணைத் தானம் புயற்குமெட் டாத கடவுள்செந்தீப்
புரவணத் தானம லைக்கிடந் தந்தபுரா தனன்சீர்ச்
சிரவணத் தானய வாருக்க லோமுத்தி சேண்மையதே. (௧௫)

மையல ராகங் கொடுகொடுங் கூற்றன் வருமுனன்பு
செய்யல ராகமங் கற்றுண்மை தேர்கிலர் தீவினையோ
ரையல ராகவப் பூங்கணை யானை யடர்த்தவரைத்
தையல ராகத்த வென்றுரைத் துண்மைத் தலத்தமர்ந்தே. (கசு)

அமரா சலந்தரு மைம்பொறி யைக்கடந் தன்பர்துதிக்
குமரா சலந்தர னைச்செற் றிரதி கொழுநனைவெல்
சமரா சலஞ்சலன் றாழ்மெய்க் கிரிவளர் தாணுவிதிக்
சமரா சலந்தரித் தாயென்ன வென்வினைக் கட்டற்றதே. (கஎ)

அற்பரை யானணு கிக்கவியோதவ னன்றிருஞ்சேர்க்
கற்பரை யானவி நாடியுங் கற்பதிற் காமனைவெல்
பொற்பரை யாணனர் காவிண் டொடுமெய்ப் பொருப்பரிலாள்
சிற்பரை யானவி ரூர்திய ரென்றுய்யச் செப்பலனே! (கஅ)

செப்பந் தரவிடை யார்செயுஞ் சூதினிற் சிக்குறலைத்
தப்பந் தரவிடை யான்மெய்ப் பொருப்பன் றகவொளிருந்
துப்பந் தரவியின் மெய்யற் குடல்பொரு டோன்றமுயிர்
கப்பந் தரவிடை நீயரு ளென்னக் கனிவினெஞ்சே. (ககூ)

கனியந்த கார மெனத்தனுக் காட்டிக் கனவுருமிற்
றெனியந்த காசிவ ஞாருட் காயினன் றெல்லைமறைத்
தனியந்த கானமர் மெய்வெற்ப வென்னச்சற் றும்பிகலா
னனியந்த காநெறி யாரவரேயுனக் காமினையே. (உ0)

ஆக்கந் தராதலம் வாழ்மனை சேய்மனை யாட்டியின்மே
லூக்கந் தராதல மேபொருந் தாவின்ப மொன்றுவராற்
றேக்கந் தராதவ மண்டல நீண்மெய்ச் சிலையரருட்
கோக்கந் சராதரத் தந்தைநா மாமுதங் கொண்டவரே. (உக)

கொண்டலம் பூவை மணிவண்ணற் காழி கொடுத்தவர்வெண்
கண்டலம் பூவைக் குருகென்ன வுட்குங் கயல்வயலின்
மண்டலம் பூவைப் பகாணி கான்மெய் வரையகத்தே
யொண்டலம் பூவைக் கெதாழுச் சகத்து ளுயர்கண்பனே. (௨௨)

பனிமதிக் கானனங் காற்கம் புயஞ்செம் பவளவிதழ்
களிமதிக் கார்மொழி நேரென்று மாதரைக் காதலித்தா
யெனிமதிக் காகுலம் வைத்தனை மெய்வரைக் கேசனையே
யுனிமதிக் காய்மன மேகமக் கேவரு முற்பவமே. (௨௩)

பவனு சனகங் கணமெய்க் கிரீச பரசடில
புவனு சனகா தியர்க்கருள் போத குருவியன்மா
தவனு சனவா விந்தனு கண்டலன் றாழுமனே
கவனு சனனந் துடைத்தெற்கு நற்கதி காட்டத்தனே. (௨௪)

அத்தம் பலவர் தரப்போகம் விற்கு மராகிதம்ப
முத்தம் பலவயிற் கண்ணியர் கொங்கை முயக்கலையிச்
சித்தம் பலவரான் மேவவுற்றுந் திளைப்பீரவரைக்
கைத்தம் பலவர் மெய்வெற்பர் தாளென்று கலப்பதுவே. (௨௫)

கலையங் கடத்தந்தி மத்தகக் கொங்கையிர் காய்தென்றலை
மலையங் கடத்தவ கையறி யீர்மற விக்குழுனங்
கொலையங் கடத்தந்த தாளர்மெய் வெற்பமர் கோனிடஞ்சோ
ளலையங் கடத்தனித் தார்கொணர் வீர்மைய லாற்றுதற்கே. (௨௬)

ஆற்றுக்கா லாட்டியர் செய்கூத் தணிவய லார்குழுதஞ்
சேற்றக்கா லாட்டின் மதுவார்மெய் யூரசெந் தீவிழியி
னேற்றக்கா லாட்டி னிவர்குகன் றாதை யிரும்பிறைப்பற்
கூற்றுக்கா லாட்டிறங் காட்டுமுன் பெற்கருள் கூரப்பனே. (௨௭)

அப்பஞ் சருக்கரைக் குங்குள நீர்விரும் பத்திக்கைமு
கப்பஞ் சருக்க நயனருண் மைப்பதிக் காவலர்மா
றுப்பஞ் சருக்கரி யார்பவ வாரி தொலைக்கவெர்குத்
தெப்பஞ் சருக்கரை வாணிபங் காளர் திருக்கழலே. (௨௮)

திருப்பா சுரமெழு திச்சேரன் மாடுய்த்த செல்வருண்மைப்
பொருப்பா சுரமே தனிநடந் தாள்விண் புயலுமஞ்சு
நெருப்பா சுரத மொழிமட மான்விழி நித்திலம்பற்
குருப்பா சுரக நிகர்பசுந் தோளல்குற் கோமகளே. (௨௯)

கோமதி யானன மாதரு மக்களுங் கூடியழ
வேமதி யான திழந்தைய மேவுமுன் மெய்வரைக்கே
போமதி யானன்பு செய்வலென் றன்பிற் புகலரன்ற
னாமதி யானம் புரிநெஞ்ச மேகதி நண்ணுவையே. (௩0)

நண்ணா ரகங்கழி யப்புரந் தீய நகைத்தசடை
விண்ணா ரகங்கரங் கொண்டமெய் வெற்ப விடப்பணிசே
ரொண்ணா ரகங்கண நீயருள் வெவ்வினை யுந்தவெந்தன்
புண்ணா ரகங்கண மேனுநின் றாளினிற் பூசிக்கவே. (௩௧)

பூசல னந்தஞ்செய் கம்பத்த னைச்செற்ற பொற்கணையார்
கோசல னந்தனி சேய்தொழு மெய்வனைக் கோனவித்தை
யாசல னந்தக் குணங்கூசல் போல வகந்திரிவேற்
கீசல னந்தடுத் துப்பிற வாநெறிக் கின்னருளே. (௩௨)

இன்னலங் கற்குவு வுக்கொங்கை கோங்கரும் பேவுவிழி
கன்னலங் கற்குண் டொருகுஞ்சொ னந்தங் களமருங்குன்
மின்னலங் கற்குழ லாளைத் தழுவமெய் வெற்பனுக்குச்
சொன்னலங் கற்கு மிளந்தத்தை நீசென்று சொல்லுதியே. (௩௩)

ஏக வனந்த வடிவா யினன்பண மேந்தரவின்
யோக வனந்தல்செய் மால்விடை யான்பொழில் பூகநெடும்
பூக வனந்தனிற் றூறுகத் தாவுமெய்ப் பூதரன்பா
ணீக வனந்தரித் தேத்துநெஞ் சேநன் னிலையிதுவே. (௫௪)

நிலைமாமை யங்குரித் துந்துஞ் சியுமுயிர் நின்றுலகத்
தலையாமை யங்கு மெனச்சிவ யோகச மாதிநெறி
யிலையாமை யங்க மெனவைந் தடக்கின ரேத்துமுண்மைச்
சிலையாமை யங்குளக் கண்ணநீ யாள்சிர மந்தவிர்த்தே. (௫௫)

சிரமா தவம்புரி வார்க்கிட மாமெய்ச் சிலையரன்சுந்
தரமா தவரெனக் குன்றெடுத் தோன்றனைச் சாரடியர்க்
குரமா தவன்றவ ளக்கரி யான்றண் ணுறும்பதுமப்
பிரமா தவனன் மதியிவர் பேறும் பெரிதலவே. (௫௬)

அல்வினஞ் சார வரக்கண்ட விண்ணவ ரஞ்சிநக
வில்வினஞ் சாரறச் செற்றோயா னென்ன மிசைந்தருள்வார்
செல்வினஞ் சாரல் வருமெய்க் கிரியினந் தேர்முனங்கார்
புல்வினஞ் சாரதியே துன்புறுமம் புயத்திருவே. (௫௭)

புயங்கந் தரங்கழை சங்குகண் வாள்விற் புருவமொழி
பயங்கந் தரங்கவி ரைம்பா லதரம்வெண் பன்முருந்து
தயங்கந் தரங்கம லங்கல்விடைவ தனந் தனம்வா
ணியங்கந் தரங்கச்செவ் வேணிமெய் யூரன்வெற் பேந்திழைக்கே. ()

எந்தர வம்புவி வாழ்கையர் பாற்புக் கிரப்பவுமங்
காந்தர வம்புய லார்ப்பெனக் காட்டிச கறுத்திடவே
மாந்தர வம்புசெய் வார்தம்மை வாழ்த்தி வணங்கினனுள்
சாந்தர வம்புரி யார்தொழு மெய்வரைச் சங்கரனே. (௫௯)

கரசர ணாதிக ரந்தொளி யாய்ச்செங் கமலையர்நாற்
சிரசர ணாதிக லோங்கநின் றேய்தொண்டர் சிந்தையென்னும்
பரசர ணாதிகந்தந்தொழு பெய்ப்ப தியாய் மறைநூ
புரசர ணாதியில் லேனையெந் நாளிற் புரப்பதுவே. (௪௦)

புரங்கடந் தானை முகனைப் பயந்து புரத்தொருபா
லரங்கடந் தானை யனஞ்சொல் விடைவயி னூரணிசேர்
சிரங்கடந் தானையந் தாரத ளாவணி செல்வனைநல்
வரங்கடந் தானைச் சரதவெற் பானை வழுத்துநெஞ்சே. (௪௧)

வழுவையி னானனத் தானவற் கொன்றிகன் மாதவரே
வுழுவையி னாவுறத் தோலணிந் தோயுண்மை யோங்கனிதந்
தழுவையி னாவனைக் கூடலிற் பாடிச் சமணறமுன்
கழுவையி னாரவிட் டோனத்த னேயெனைக் காத்தருளே. (௪௨)

அருங்கா ணகந்தேய் தரக்கங்கை யாதிசென் றுடியும்யோ
கிருங்கா ணகங்குன்றி லேனங்க நொந்திழைப் பீருறுமான்
மருங்கா ணகமுழங் குண்மை வெற்பானிந வர்க்குமெட்டச்
சுருங்கா ணகநந் தனிபங்க வென்னைச் சொலமுத்தியே. (௪௩)

முத்தி வரம்புயிர்க் குஞ்சர தாசல முக்கணர்பாற்
பத்தி வரம்பு தணவா நெறிசெலும் பித்தர்கணெஞ்
சத்தி வரம்புரை தீரநல் காயெனத் தந்துமையோங்
கத்தி வரம்புவி மன்னவர் தாழவு மாக்குவரே. (௪௪)

குவிக்கா மனத்தை யுளார்க்கரி யாய்நிச கோத்திரஞ்சேர்
சவிக்கா மனத்தைபங் காவினை யேனையுந் தாய்வயினுற்
பவிக்கா மனத்தை யணிவார்க்கெட் டாத பதமலரு
தவிக்கா மனத்தையல் பொன்புவிக் காகுந் தவிப்பறவே. (௪௫)

031,12x N08
222803

# திருமெய்யத்திரிபந்தாதி.

தவியா தவத்துக் குறுகிழற் போலமுத் தாய்வெப்பத்
தவியா தவத்தை யுறினுநின் ருணிழற் காவெனைச்சம்
பவியா தவந்துடைத் தாளொண் குழையெனப் பாம்பணிவார்
செவியா தவம்புரி வார்தொழு மெய்ப்பதிச் சிற்பரனே. (௪௬)

பரசக லாத கராகணம் புல்லரிற் பங்கிதிரி
சிரசக லாவன்பு நெய்விளக் கேற்றிலன் நீனனையா
ளரசக லாமதி வேணியு மெய்க்கிரி யார்ந்திடுசங்
கரசக லாபநின் ருளன்றி வேண்டுங் கருத்திலனே: (௪௭)

கருப்பங் கயன்மொழி கண்ணுமை வாமங் கலந்துமுக
வுருப்பங் கயமுக மாமனுக் காக வுடன்றவெம்மான்
மருப்பங் கயமலர்ப் பள்ளியின் வெள்ளோ திமந்துயின்மெய்ப்
பொருப்பங் கயன்றந்தை யத்தியைத் தீர்த்தருள் பூத்தனனே. (௪௮)

தனக மலைக்க விதிக்குமெட் டாதுயர் தாணுபசுங்
கனக மலைக்க வரமணி மாடங் கதிர்செய்மெய்க்கோ
வனக மலைக்கஞ் சிறைதடிந் தான்பணி யாற்றுவிடப்
பனக மலைக்க வணீயெண் புயாவெனப் பாடுநெஞ்சே. (௪௯)

சேவா கனவிர தத்தவ சீலர்சித் தத்தளியி
ஞவா கனவிர தத்தேம் பொழின்மெய் யசலமுந்நான்
மாவா கனவிர தத்திரு வேற்கண் மடந்தைபங்கா
காவா கனவிர தச்சடை யாநின் கவிக்கெனையே. (௫௦)

கவிகை யினம்பக லாதபம் போக்கிமா கம்பரவக்
குவிகை யினம்புவி தாட்படச் செல்பவர் கூறவொண்சீர்ச்
சிவிகை யினங்க முறச்சில ரூர்வதுஞ் சிற்சிலர்நெஞ்
சவிகை யினல்குர வார்வது மெய்வெற் பரன்செயலே. (௫௧)

செய்யவ ராக மறையுமைக் கீய்ந்தருள் செம்மன்முன்னு
ணைய்யவ ராக மருப்பொசித் தார்த்தமெய் நாகரல்லாற்
பொய்யவ ராக மறுதெய்வம் போற்றுவெம் புல்லறிவீ
ருய்யவ ராகு மையில்லா நமன்புர மொன்றுவிரே. (௫௨)

ஒன்று யிரங்கம லத்தெஞ்ச மால்விழி யொன்றருச்சித்
தென்று யிரங்கவி ரர்ழிதந் தாளென வேயருண்மெய்க்
குன்று யிரங்கலை நீர்முடி யாய்வினைக் கோதறவே
நன்று யிரங்கடி யேனுநின் பத்தரி னன்குநீவே. (௫௩)

நன்மை யிடந்திகழ் வேமிக்குயர நலிவி னையாற்
பன்மை யிடந்திரி கின்றநெஞ் சேபவம் பார்த்திலைகொல்
வன்மை யிடந்திகழ் கூற்றுதைத் தாரை மணிமிடற்றிற்
கொன்மை யிடந்து நிறத்தர்மெய் வெற்பரைக் கூடலென்றே. (௫௪)

என்றி னரும்ப லுகுத்தங்கி கைதுணித் தேத்துசெம்பொன்
மன்றி னரும்ப லுரியார் மருவ வராவிடின்மெய்க்
குன்றி னரும்பலை குங்கும மென்முலைக் கோதையுநா
ளொன்றி னரும்பலு கம்பல வென்றின்ன லுற்றெண்ணுமே. (௫௫)

எண்ணு திருக்குச் சிலம்படி யாயெரி யேறுநுதற்
கண்ணு திருக்குளத் தால்வினை யீட்டிக் கடுநிரய
நண்ணு திருக்கும் படியாண்மெய் வெற்ப நகவிடஞ்சேர்
பெண்ணு திருக்குழை யாய்ந்த் தணிந்த பிநாகத்தனே. (௫௬)

கத்தனுஞ் சத்தி வுரவயின் றுண்மணிக் கண்டன்செவ்வேட்
கத்தனஞ் சத்திர மாமல ரானை யடுமெய்வெற்பா
னித்தனஞ் சத்தியி னுதனை யுன்னுநெஞ் சேகதிக்கோர்
வித்தனஞ் சத்திசெய் தென்னக் கடற்புவி வேட்கைவிட்டே. (௫௭)

வேட்கையன் றானவர்க் கஞ்சித் தவம்புரி மெய்க்கிரியிற்
றாட்கையன் றானன முங்கஞ்ச நேர்மலைத் தையல்பங்கன்
பூட்கையன் றான வலிதொலைத் தானிடர் போந்தனைபாற்
பீட்கையன் றானம் வருக்கா வரமுனம் பெற்றிலனே. (ருஅ)

பெற்றக் கொடியத்த சேல்பாய் தடமெய்ப் பிறங்கலெம்மான்
முற்றக் கொடிய னரம்புதி ரந்தசை மூடுடலைச்
சுற்றக் கொடியடு நாய்க்குண வாக்கச் சுமந்துநொந்தேன்
குற்றக் கொடிய னெனைத்தடுத் தாள்சற் குணாசலனே. (ருகூ)

சலதரங் கண்ணுறப் பாதிகொண் டுற்றெனச் சண்டனும்வெண்
பலதரங் கவ்விக் கரும்போத்து கைத்துநும் பான்மருவி
வலதரங் கஞ்சக் கொடுபோமு னம்புவி மன்பதையீர்
நலதரங் கண்டு சரண்புகு வீர்மெய் நகப்பரற்கே. (சு0)

நகரங்க மந்தா வளங்கேசரியுட னட்புறுர்வான்
சிகரங்க மஞ்சூன் மழைதவ ழூண்மைச் சிலைக்கிறைவர்
தகரங்க மழுங்கு ழல்கலை சோரத் தழுவினராற்
பகரங்க மருகுத் தாங்குநின் போர்பஞ்ச பாணத்தனே. (சுக)

பாணம் புயங்கழை போல்வார் விழியெனப் பண்ணியுன்னிச்
சேணம் புயங்கண் முயற்கொம்பில் வாழ்வினிற் சிக்கிமயற்
கோணம் புயங்கடி யேற்குன் னருவென்றி கூட்டுன்வயோ
பூணம் புயங்க மெனவணி சத்திய பூதரனே. (சுஉ)

பூதர னஞ்சுமந் தான்றொழு மெய்வரைப் போதனுமைக்
காதர னஞ்சுமந் தாகினி யானல் லருளிலை யேற்
சீதர னஞ்சுமந் தாரமுன் னுந் தருச் செல்வருமு
ஞேதர நஞ்சுமந் தாரவற் போல்வந்து நுங்குமன்றே. (சுங)

நுங்க மலங்கடைத் தேறலி லாவெய்ய நொய்யனெனை
யங்க மலங்க விடலற வோர்நின் னருட்கண்வைத்தாள்
கங்க மலங்க நிழல்கண்டு வாழை கரந்துறையுஞ்
செங்க மலர்க்கமழ் தண்பணை மெய்வரைச் சின்மயனே. (சுச)

சின்ன மருங்கு விறந்தனம் பாரஞ் செறியுமங்கு
வின்ன மருங்குழல் வண்டினங் காள் கள்ளினைமிசைவார்
முன்ன மருங்கு தவிர்வ ரொப்பீர்பழி மூளுமராக்
கன்ன மருங்குழை யாவணி யத்தன்மெய்க் கன்மகட்கே. (சுரு)

கன்மந் திரணமு நீங்காச் சுகந்துயர் காணவுமென்
சென்மந் திரளுறு மந்தோ நின்சேவடி சேரவெங்ஙன்
பன்மந் திரச நருவனுங் காமெய்ப் பருப்பசத்தாய்
நின்மந் திரமஞ் செழுத்தன்பி னுனிகழ்த் தாவிடினே. (சுசு)

தாவிக் கரும்பக ரேம்வெங் காலனிற் றானும்வந்தான்
பாவிக் கரும்பனெல் லாயதி கூடலிற் பார்ப்பனிக்கா
யாவிக் கரும்பழி யஞ்சினை மெய்ப்பதி யாயணைந்தாள்
காவிக் கரும்பதற் கேய்விழி கொங்கைக் கனிக்குமின்றே. (சுஎ)

இன்றே னலம்புசந் தாடவி மெய்ப்பதி யீசர்வெற்பி
னன்றே னலம்புற வம்புரக் குஞ்சொ லளகம்விழி
துன்றே னலம்புரம் மின்னு ளுருவெளி தோன்றப்பினன்
சென்றேனலம்புரி சிந்தைய னுமதன் செய்துயர்க்கே. (சுஅ)

துயரத ராம நெறியின்றி நன்னெறி தோன்றவமா
தியரத ராமனின் னருள் யதிகதி சேர்வதென்று
ளயரத ராம னுருதிசை யோதுமெய் யத்திரியாய்
சயரத ராமன் பவந்தொலைத் தாளுந் தயாநிதியே. (சுகூ)

நிதியோ தனத னெனப்படைத் தாலு நிதிபதிநெற்
கதியோ தனமணி யாளடு மைத்திறங் கற்பி ருந்
ததியோ தனநடை மின்னிலம் யாவுந் தனதலகேசோ
மதியோ தனதரன் மெய்க்கிரீ சன்றாண் மலர்நெஞ்சமே. (௭௦)

மலவல்லி பங்கமு றத்தறித் துன்பதம் வைச்தருடேன்
குலவல்லி பங்கயஞ் சூழ்தட மெய்வரைக் கோனவிர்வா
ணிலவல்லி பங்கண் முகங்குழற் கொங்கையு நேருமிமா
சலவல்லி பங்க கடைக்கணித் தென்புன் றலையிடத்தே. (௭௧)

இடமா தவனம் புலியழற் கண்ண லிலங்குமன்று
ணடமா தவனம் புலிபணி யேத்த நடிக்குமன்பர்
கடமா தவனம் புலிய பவந்தனைக் காயிமைய
மடமா தவனம் புலின்சடை யண்ணற்கு வாழ்மெய்யமே. (௭௨)

மெய்ய மலைக்கடல் சூழ்புவி யாரல் வினவினின்றே
வைய மலைக்கடங் காநகை யேற்கி னருங்கலத்திற்
பெய்ய மலைக்கடன் நீர்வதென் றுளினிப் பேரமர்செய்
வெய்ய மலைக்கடந் தான்றொழு மெய்ப்பதி வித்தகனே. (௭௩)

வித்தம் பலிக்கும் வகைதேடி யக்கம் வெளிநொந்தே
சித்தம் பலிக்கு வலையமெல் லாஞ்சென்று காட்டிநிற்பே
னத்தம் பலிக்குலஞ் சூழ்வயன் மெய்வனா நாதரந்தா
ணித்தம் பலிக்குழன் றூரரு ளென்று நிரம்புவதே. (௭௪)

நிரஞ்சன மட்டுந்து சோலைமெய் வெற்ப நிகழ்நிறம்ப்
கரஞ்சன மட்டுவர் வாயுண்ட வன்றாழ் கழலிநில
வரஞ்சன மட்டுந் தொடையளி யாய்கொண் மலர்சணைய
விரஞ்சன மட்டுக் கயர்ந்தேன் றணியென் விரகமுமே. (௭௫)

கருக வனங்கந் தரணிபி ஞர்மெய்க் கலனடைகஞ்
சரக வனங்கந் தரநந்தை நேர்முனித் தையலர்க
கைமுக வனங்கந் தாவனங் கன்றுயர்க் காக்குறமஞ்
சுமுக வனங்கந் தரச்சடை யன்புகழ் சொன்மதியே. (எசு)

மதிக்கண்ணி யங்கமு மான்மழுக் கைவர தாபயம்வே
னுதிக்கண்ணி யங்கமொர் பாகமு மின்னரு ளேக்குமுறக்
கதிக்கண்ணி யங்க விடையின்வந் தாள்வன் மருதருமெய்ப்
பதிக்கண்ணி யங்கவன் ருண்மனத் தன்பு பதிப்பவர்க்கே. (எஎ)

பதியனந் தம்பசு வாநர ரண்டப் பரப்பிரு
நிதியனந் தம்புரி யந்தக னென்று நிலவியதண்
மதியனந் தன்புவி நீரங்கி மாருதம் வான்முதலா
விதியனந் தங்கயன் மான்மற் றெவைக்குமெய் வெற்பண்ணலே, ()

அண்ண லருக்கனை யப்பற் புடைத்த வரன்கமலத்
தண்ண லருக்க னையவடி யார்மெய்ச் சயிலாதம்மை
யெண்ண லருக்கனை யன்னவர் நெஞ்சன் பிலாரிடமே
நண்ண லருக்கனை யநரென் பார்க்கு நமனஞ்சுமே. (எகூ)

நமனஞ்சு மாமவு னத்திருந் தின்ப நகக்கலைக்கோ
தமனஞ்சு மானுமைக் கண்மனை யாக்கிய தாளரியேத்
துமனஞ்சு மாவத் திரன்மெய்க் கிரீசன்மெய்த் தொண்டருக்காய்ச்
சமனஞ்சு மாறுலகத் தானையுன் னிச்செய் நவமிலமே. (அ0)

இலங்கை யிராவணற் காய்ந்தமெய் வெற்பரீ ராயிரங்கொம்
பலங்கை யிராவணத் திண்கள் ருர்முன்னெ ரன்பனைமன்
றிலங்கை யிராவணங் காட்டித் தடுத்தரு ளெந்தையெனூழ்
விலங்கை யிரர்வண மேதறித் தின்பத மேல்வைப்பரே. (அக)

வ யிநாகமெஞ் ஞானத்தி ருள்வினை மேவவிதே
வ யிராகயில் வெண்மதி யென்ன விருந்துயருண்
யிராகந் தவிர்திநெஞ் சேயொளிர் மாற்றுயர்பொன்
வ யிராக வரிக்கடைக் காமெய் புரன்பணிக்கே. (௮௨)

ணியப் பவந்துடைத் தும்பர் பதமெவையுந்
ரியப் பரமுத்தி சேரத் தருவரிந்தின்
ரியப்பர் சென்னிமுன் கூடவிற் சுந்தரப்பேர்த்
ணியப்ப விட்டமெய் வெற்பரைத் திண்ணநெஞ்சே. (௮௩)

னகந்திகழ் மெய்ப்பத்தி மைக்குச் செருப்புதையார்
னகந்தி நிறனிடை காரள கந்தனர்கள்
னகந்தின நேருமை பஙகன்மெய் வெற்பமர்ந்து
னகந்திறம் பாரவ ரேபரி பக்குவரே. (௮௪)

யருந்தரி யூர்விடை தெவ்வடுங் கோலரும்போ
ல யருந்தன மார்மனை யாக்கரன் சூழ்மகந்தந்
வலை யருந்தரி ணந்திகழ் கையன்மெய்ச் சைலனையே
கவலை யருந்தன மேல்வைத் திடாது கருதுநெஞ்சே. (௮௫)

கருமஞ் சரியுறங் கண்டவர் கண்டசெங் கண்ணுதல்மாங்
தருமஞ் சரிதளிற் கோகிலந் தாவுமெய்ச் சைலத்தெம்மா
னுருமஞ் சரியயன் றூழ்சர ணம்புயத் தொள்ளியசீர்ப்
பொருமஞ் சரிதக் கவிமாலை சூட்டிடப் போதிநெஞ்சே. (௮௬)

போதிக் கிலேசர மாகந் தொடுமெதன் பொன்றிடலின்
றேதிக் கிலேச மெனவ ர்ந் தாருயி ரேகுறுமா
லோதிக் கிலேசமுங் கண்பொரு தாவினி யுய்வதெ
வீதிக் கிலேச லுறுதருண் மெய்வரை நேசத்தனே. (௮௭)

03/12+ N08



..யெ மாவரை யத்தம னத்தடஞ் சாரவந்த
வ.. மாவரை யத்தம னத்தர்சே யன்பர்தமை
நிற.. ..ாவரை யத்தம னத்த.. நீங்கவெங்கோ
பத்திய மா.. ..ரை யத்த மனத்.. பயமென்பரே.

என்பத் தியங்க வுரியன்மெய் வெற்புறை யீசனெண்வா
கன்பத்தி யங்கவுரி யன்றக் கண்மகக் கண்வி துவைத்
துன்பத் தியங்க வுரிஞ்சினன் மால்செயத் தொண்டருள்..
வன்பத் தியங்க வுரியனுக் கன்றி வரவஞ்சுமே.

வரவஞ்ச மாவியக் கெண்கண்ண னேத்தந்தி வண்ணவல்கு..
கரவஞ்ச மானஞ்சொல் வல்லிபங் காளநி சாசலசங்
கரவஞ்ச மான புரம்பொடித் தண்டனைக் காத்தருள்வோய்
பிரவஞ்ச மாவி லெனைப்புகுத் தாதுசெய் பேரருளே.

அரும்பவந் தாண்டவ மேபுரிந் தீண்ட வருவினையால்
வரும்பவந் தாண்ட வகையறி யேனை மறைச்சிரத்த
விரும்பவந் தாண்டலர்த் தாதுதிர் சோலைமெய் வெற்பமனந்
திரும்பவந் தாண்டரு ளாவிடி னுனுய் திறமிலையே. (௯௯)

திறவானஞ் சான்றவ ராமன்பர்க் கன்றிமின் செஞ்சடிலத்
துறவானஞ் சார்மதி கொண்டோன் பரதெய்வ மொப்புச்செத்துப்
பிறவானஞ் சார்மதி லன்றெரிக் கீய்ந்த பிரானியல்சேர்
புறவானஞ் சா.. ..ங்குன்று னருங்கதிப் பொற்கதவே. (௯௨)

பொற.. ..வ ரென்னக் .. ..த்தவர் பொற்பிடையார்
வற்.. மாதவ ரே.. ..ஞ் சர.. ..ர் மருக்கமல
.. ..லை ம.. ..ன்மிக மூண்மைந கப்பரன்சேர்
ச..லை ..தவர்க் ..ந்தெரி ..ர்ப்பதங் காணநெஞ்சே. (௯௩)

222803